க.பொ.த (உ/த)ப் பரீட்சை - 2013
கணக்கீடு I
நேரம் : 2 மணித்தியாலம்

01. கணக்கீட்டின் அடிப்படை நோக்கமாக அமைவது பின்வருவனவற்றுள் எது?
1. கணக்கு புத்தகத்தில் எல்லா கொடுக்கல் வாங்கல்களையும் பதிவு செய்தல்
2. தீர்மானம் மேற்கொள்வதற்கான தகவல்களைப் பாவனையாளர்களுக்கு வழங்குதல்
3. முகாமைக்கு விபரமான தேவையான கிரயப் பகுப்பாய்வினை வழங்குதல்
4. நிதி கொடுக்கல் வாங்கல்களைத் திரட்டுதலும் வகைப்படுத்தலும்
5. நிறுவனமொன்றுக்கு நிதிக்கூற்றுகளினூடாக நிதிப் பெறுபேறுகளை வழங்குதல் (…….)

02. வரையறுத்த தோம்சன் கம்பனியின் நிதிக்கூற்றில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட சில தகவல்கள் வருமாறு

	01.04.2011	31.03.2012
நிறுத்தி வைத்த இலாபம்	200,000	300,000
பொது ஒதுக்கம்	100,000	150,000
மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்	75,000	125,000

2011/2012ம் ஆண்டுக்கான செலுத்திய பங்கு இலாபம் ரூபா 80,000 ஆகும். மேற்படி தகவல்களின் அடிப்படையில் 31.03.2012இல் முடிவடைந்த ஆண்டுக்கான வரிக்குப் பின்னரான இலாபம்

1. ரூபா 100,000 2. ரூபா 150,000
3. ரூபா 230,000 4. ரூபா 200,000
5. ரூபா 500,000 (…….)

03. இறுதி இருப்பினைக் குறைவாகக் காட்டும்போது வருமானக் கூற்றின் உருப்படிகளில் ஏற்படும் தாக்கமாக அமைவது
1. விற்பனைக் கிரயம் கூடுதலாகவும் தேறிய இலாபம் குறைவாகவும் காணப்படும்.
2. விற்பனைக்கிரயம் குறைவாகவும் தேறிய இலாபம் குறைவாகவும் காணப்படும்.
3. விற்பனைக் கிரயம் குறைவாகவும் தேறிய இலாபம் கூடுதலாகவும் காணப்படும்.
4. விற்பனைக் கிரயம் கூடுதலாகவும் தேறிய இலாபம் கூடுதலாகவும் காணப்படும்.
5. வருமானக் கூற்றின் எந்த உருப்படிகளிலும் தாக்கமெதனையும் ஏற்படுத்தாதது (……..)

04. கீதா, சீதா ஆகியோர் முறையே ரூபா 400,000 ரூபா 300,000 மூலதனமாக இட்டு ரூபா 1,000,000 செலவில் கட்டடமொன்றை அமைத்து வாடகைக்கு விடப்பட்டிருந்தது தொடர்பில் ரூபா 300,000 வங்கிக்கடன் பொறுப்பொன்றினையும் கொண்டிருந்தனர். பின்னர் ஏற்பட்ட அனர்த்தம் ஒன்றில் கட்டிடம் முற்றாகச் சேதமுற்றது. தற்போது வங்கியின் பொறுப்பினைத் தீர்ப்பதில் கீதா, சீதா ஆகியோரின் பங்களிப்பு முறையே
1. ரூபா 200,000 ரூபா 100,000
2. ரூபா 100,000 ரூபா 200,000
3. ரூபா 150,000 ரூபா 150,000
4. ரூபா 171,428 ரூபா 128,572
5. ரூபா 128,572 ரூபா 171,428 (…….)

05. ரம்பா பாதணி வியாபார நிறுவனம் ராதா சில்லறை வியாபார நிறுவனத்துக்குப் பாதணிகளை விற்பனை செய்கிறது. 31.03.2012இல் ஒரு பாதணி ரூபா 600 படி 25 பாதணிகளையும், ஒரு தோற்பை ரூபா 400 படி 100 தோற்பைகளையும் கடனுக்கு விற்பனை செய்தது. இவ் விற்பனை நடவடிக்கைகளுக்கு 10% வியாபாரக் கழிவு வழங்கப்படுவதுடன் 3 மாதங்கள் முடிவடைவதற்கு முன் இவற்றுக்கான பணத்தை செலுத்துவாராயின் 5% காசுக் கழிவும் வழங்கப்படும். இதற்கமைய 30.04.2012இல் இப் பாதணி, தோற்பை தொடர்பாக செலுத்த வேண்டிய முழுத்தொகையையும் ராதா நிறுவனம் செலுத்தியது. மேற்கூறிய கொடுக்கல் வாங்கல்களுக்கமைய மொத்த கொள்வனவு பெறுமதியும் ரம்பா நிறுவனத்துக்குச் செலுத்திய முழுப் பணமும் முறையே.

1. ரூபா 55,000 , ரூபா 49,500
2. ரூபா 49,500 , ரூபா 24,750
3. ரூபா 49,500 , ரூபா 47,025
4. ரூபா 55,000 , ரூபா 47,025
5. ரூபா 47,025 , ரூபா 49,500 (…….)

* 6ம், 7ம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழ்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.

வரையறுத்த சுதன் கம்பனியின் 2012 மார்ச் 31இல் நிதிக்கூற்றுகளில் இருந்து பெறப்பட்ட தகவல்களும் சில பகுப்பாய்வு விகிதங்களும் வருமாறு

கடன் விற்பனை ரூபா 400,000
இருப்பு சுழற்சி வீதம் 4 தடவைகள்
மொத்த இலாப வீதம் 25%
கடன் சேகரிப்புக் காலம் 3 மாதங்கள்

06. நிறுவனத்தின் சராசரி இருப்பு
1. ரூபா 75,000
2. ரூபா 7,500
3. ரூபா 60.000
4. ரூபா 30,000
5. ரூபா 37,500 (…….)

07. நிறுவனத்தின் சராசரி கடன்பட்டோர்
1. ரூபா 10,000
2. ரூபா 15,000
3. ரூபா 50,000
4. ரூபா 100,000
5. ரூபா 200,000 (…….)

08. ஒரு நிறுவனத்தின் தகவல்களில் நிதிநிலைமை, நிதிச்செயற்பாடு, நிதி நிலைமையில் ஏற்படும் மாற்றம் என்பவற்றை முறையே எடுத்துக் காட்டும் நிதிக்கூற்றுக்கள்
1. காசுப்பாய்ச்சற் கூற்று, வருமானக்கூற்று, ஐந்தொகை
2. வருமானக்கூற்று, காசுப்பாய்ச்சற் கூற்று, ஐந்தொகை
3. உரிமை அசைவுக்கூற்று, ஐந்தொகை, வருமானக்கூற்று
4. சொத்து அசைவுக்கூற்று, வருமானக்கூற்று, காசுப்பாய்ச்சற்கூற்று
5. ஐந்தொகை, வருமானக்கூற்று, உரிமை அசைவுக்கூற்று (……..)

09. குத்தகையாளரிடமிருந்து பெறப்பட்ட குத்தகையாதனம் நிறுவனத்தின் ஐந்தொகையில் சொத்தாகக் காட்டுவதற்கு அடிப்படையாக அமைந்த எண்ணக்கரு யாது?
1. பாதுகாப்பு எண்ணக்கரு
2. பொருண்மை எண்ணக்கரு
3. வரலாற்றுக்கிரய எண்ணக்கரு
4. தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவம்
5. தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

10. 2011 மார்ச் 31இல் அட்டுறு மின்கட்டணம் ரூபா 12,000 ஆக இருந்தது. 2012 மார்ச் 31இல் முடிவுற்ற வருடத்தில் செலுத்தப்பட்ட மின்கட்டணம் ரூபா 160,000 இதில் 2012 ஏப்ரல் 30இல் முடிவுற்ற காலாண்டுக்கான ரூபா 48,000க்கான ஓர் பட்டியலை உள்ளடக்கியிருந்தது. 2012 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான மின்கட்டணமாக இலாப நட்டக் கணக்கில் தாக்கல் செய்யப்பட வேண்டிய தொகை யாது?
1. ரூபா 132,000
2. ரூபா 156,000
3. ரூபா 164,000
4. ரூபா 184,000
5. ரூபா 172,000 (…….)

11. மல்லிகை, முல்லை, ரோஜா பங்குடமையின் இலாபநட்ட விகிதம் 3:2:1 ஆகும். இப்பங்குடமையில் இருந்து ரோஜா இளைப்பாறுகின்றார். அவ்வேளையில் பங்குடமை நிறுவனத்தில் ரூபா 30,000 நன்மதிப்புத் தொகை காணப்பட்டது. இதனை ரூப 60,000 ஆக மதிப்பிட்டு பதிவழிக்கப்படுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது அவர்களின் மூலதனக் கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்பட்டன. மல்லிகை, முல்லையினது மூலதனங்கள் முறையே பின்வருமாறு மாற்றமடையும்.
1. மல்லிகையின் மூலதனம் ரூபா 10,000 ஆல் அதிகரிக்கும். முல்லையின் மூலதனம் ரூபா 14,000 ஆல் அதிகரிக்கும்.
2. மல்லிகையின் மூலதனம் ரூபா 11,000 ஆல் குறைவடையும். முல்லையின் மூலதனம் ரூபா 14,000 ஆல் குறைவடையும்.
3. மல்லிகையின் மூலதனம் ரூபா 36,000 ஆல் குறைவடையும். முல்லையின் மூலதனம் ரூபா 24,000 ஆல் குறைவடையும்.
4. மல்லிகையின் மூலதனம் ரூபா 36,000 ஆல் அதிகரிக்கும். முல்லையின் மூலதனம் ரூபா 24,000 ஆல் அதிகரிக்கும்.
5. மல்லிகையின் மூலதனம் ரூபா 15,000 ஆல் அதிகரிக்கும். முல்லையின் மூலதனம் ரூபா 10,000 ஆல் அதிகரிக்கும். (……..)

12. ஒரு முதலீட்டுத் தீர்மானத்திலிருந்து எழும் பின்வரும் காசுப்பாய்ச்சல்களில் எது தேறிய நிகழ்காலப் பெறுமதி முறையின் அடிப்படையில் மதிப்பிடும் தேறிய காசுப்பாய்ச்சல்களைக் கணிப்பதுடன் தொடர்பற்றதாக இருக்கும்.

1. வருமானம்
2. வட்டிச்செலவு
3. செயற்பாட்டுச் செலவு
4. தொழிற்படு மூலதனம்
5. ஆரம்ப முதலீடு (…….)

13. நடைமுறையல்லா சொத்துக்களுக்கு பெறுமானத் தேய்விடுவதற்கு அடிப்படையாக அமைந்த கணக்கீட்டு எண்ணக்கரு யாது?

1. மாறாத்தன்மை எண்ணக்கரு
2. முக்கியத்துவத் தன்மை எண்ணக்கரு
3. வரலாற்றுக்கிரய எண்ணக்கரு
4. முன்னெச்சரிக்கை எண்ணக்கரு
5. தொடர்ந்து செல் எண்ணக்கரு (……..)

14. 01.04.2011இல் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட வரையறுத்த கம்பனியொன்றின் 2011/2012ம் ஆண்டிற்கான சில தகவல்கள் வருமாறு

வரிக்குப் பின் தேறிய இலாபம்	ரூபா 5,000
செலுத்திய வருமான வரி	ரூபா 15,000
31.03.2012இற்கான மீதிகள்	
கடன்படுனர்	ரூபா 30,000
கடன்கொடுனர்	ரூபா 20,000
அட்டுறு செலவுகள்	ரூபா 20,000

31.03.2012இல் முடிவுற்ற ஆண்டுக்கான செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசு

1. ரூபா (15,000)
2. ரூபா 3,000
3. ரூபா (10,000)
4. ரூபா 10,000
5. ரூபா 15,000 (………)

15. வணிக நிறுவனமொன்றின் முதலாவது வாரத்துக்கான கொள்வனவு, விற்பனை தொடர்பான தகல்வகள் வருமாறு

100 அலகுகள் 10/= படி 1,000 ரூபா
50 அலகுகள் 12/= படி 600 ரூபா
80 அலகுகள் 15/= படி 1,200 ரூபா

குறித்த காலப்பதியில் ஒரு அலகு ரூபா 30 படி 140 அலகுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. முதல் உள் முதல் வெளி முறையில் இருப்பு கணிப்பீடு மேற்கொள்ளப் படின் மொத்த இலாபம் யாது?

1. ரூபா 2,520
2. ரூபா 1,480
3. ரூபா 1,680
4. ரூபா 1,320
5. ரூபா 2,720 (………)

16. ஒரு நிறுவனத்தின் மொத்த இலாப வீதம் 25% ஆகும். ஆண்டிற்கான மொத்த இலாபம் ரூபா 8,000 ஆகும். செலவுகள் ரூபா 6,800 ஆகும். தேறிய இலாப வீதம் யாது?

1. 5%
2. 3.75%
3. 11.25%
4. 22.67%
5. 5.10% (………)

17. ராதிகா வியாபார நிறுவனத்தின் கடன் விற்பனை தொடர்பான தகவல்கள் வருமாறு

2012	தை	ரூபா 40,000
	மாசி	ரூபா 30,000
	பங்குனி	ரூபா 20,000
	சித்திரை	ரூபா 25,000

இவருடைய அனுபவத்தின் படி கடன் சேகரிப்பு வருமாறு

- குறிப்பிட்ட மாதத்தில் விற்பனையில் 20%
- விற்பனையை தொடர்ந்து வரும் மாதத்தில் 60%
- விற்பனையைத் தொடர்ந்து வரும் 2ம் மாதத்தில் 10%

- காசுக் கழிவு 5%
- அறவிடமுடியாத கடன் 5%

கடன்பட்டோரிடமிருந்து யூலை மாதத்தில் பெற்ற காசு எவ்வளவு?

1. ரூபா 21,000
2. ரூபா 20,000
3. ரூபா 18,000
4. ரூபா 24,000
5. ரூபா 16,000

(………)

18. கழகம் ஒன்றின் புத்தகத்திலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

	31.03.2011	31.03.1012
வருமதி சந்தா	64,000	48,000
முற்பணமாகப் பெற்ற சந்தா	13,400	18,200
பெற்ற சந்தா	240,000	360,000
பெறவேண்டிய சந்தாவில் பதிவழிப்பு	-	2,200

31.03.2012இல் வருமானச் செலவுக் கணக்கிற்கு மாற்றப்படும் சந்தா யாது?

1. ரூபா 385,200
2. ரூபா 341,400
3. ரூபா 355,800
4. ரூபா 383,000
5. ரூபா 382,000

(………)

19. வரையறுத்த சுப்பு கம்பனி ஊழியன் குட்டியின் குறைந்த பட்ச உத்தரவாத கூலியாக மாதம் ரூபா 20,000 உம், நாளொன்றுக்கான உற்பத்தி இலக்குக்கு மேலதிகமாக உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு அலகிற்கும் ரூபா 20 வீதம் ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தப் படும். மாதமொன்றின் வேலை நாட்களின் எண்ணிக்கை 20 ஆகும். உற்பத்தித் தரவுகள் கீழ் வருமாறு

பொருள்	நாளொன்றுக்கு உற்பத்தி இலக்கு	மாதமொன்றுக்கு உண்மையான உற்பத்தி
A	20 அலகு	600 அலகு
B	16 அலகு	560 அலகு

குட்டியின் இம்மாத மொத்த வேதனம் யாது?

1. ரூபா 27,000
2. ரூபா 28,000
3. ரூபா 23,200
4. ரூபா 24,800
5. ரூபா 28,800

(………)

20. நிறுவனமொன்றின் ஆதன பொறி உபகரணம் தொடர்பான அசைவுக்கூற்று வருமாறு

விபரம்	காணி "000"	கட்டிடம் "000"	மோட்டார் "000"
01.04.2011இல் மீதி/ வந்தது	600	3,400	7,000
சேர்த்தல்	200	-	-
மறு மதிப்பீடு	100	-	-
அகற்றல்	-	-	(500)
01.04.201இல் பெறுமானத் தேய்வு ஏற்பாடு மீதி	-	1,000	900
நிகழ் ஆண்டு பெறுமானத்தேய்வு	-	170	1,625
அகற்றல் பெறுமானத் தேய்வு	-	-	(250)

- ஆண்டு காலத்தில் காணி மட்டும் கொள்வனவு செய்யப்பட்டது. அத்துடன் மீள் மதிப்பீடும் செய்யப்பட்டுள்ளது.
- மோட்டார் விற்பனையில் எழுந்த இலாபம் ரூபா 400,000 ஆகும்.

ஆதனம் பொறி உபகரணம் தொடர்பில் 3.03.2012இல் ஏற்பட்ட காசு உட்பாய்ச்சல், காசு வெளிப் பாய்ச்சல் முறையே

1. ரூபா 300 ரூபா 650
2. ரூபா 200 ரூபா 650
3. ரூபா 650 ரூபா 200
4. ரூபா 500 ரூபா 250
5. ரூபா 250 ரூபா 500

(…….)

21. நிறுவனமொன்றில் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரத்தின் கிரயத்தில் கீழ் தரப்பட்டவை களில் எவற்றை உள்ளடக்க முடியும்.

A - கொள்வனவு விலை

B - நிறுவுதல் கிரயம்

C - பாவனைக் காலத்தில் உதிரிப்பாகங்களின் மாற்றீடு

D - பாவனைக்கு முன்பான இயந்திர பரிசோதிப்புக் கிரயம்

1. A, B ஆகியன மாத்திரம்
2. A, C ஆகியன மாத்திரம்
3. A, D ஆகியன மாத்திரம்
4. A, B, C ஆகியன மாத்திரம்
5. A, B, D ஆகியன மாத்திரம் (……..)

22. "தேறல் எண்ணக்கரு தொடர்பாக பின்வரும் கூற்றுகளில் எது/ எவை உண்மையானதாகும்.

A - வருமானம் உழைக்கப்படல் வேண்டும்.

B - வருமானம் தேறப்படல் வேண்டும்.

C - பொருட்கள் தொடர்பான உற்பத்திச் செயன்முறையினை முடிவுறுத்த வேண்டும் என்பது அவசியமில்லை

1. A மாத்திரம் 2. B மாத்திரம்
3. A, B ஆகியன மாத்திரம் 4. A, C ஆகியன மாத்திரம்
5. A, B, C ஆகியன மாத்திரம் (……..)

23. சரத்தின் வியாபாரத்தில் 2011 நவம்பர் மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் கீழ்வருமாறு

- ரூபா 40,000 கிரயமான இருப்புக்கள் கடனடிப்படையில் ரூபா 60,000க்கு விற்பனை செய்யப்பட்டது.
- ரூபா 20,000 கிரயமான இருப்புகள் காசு அடிப்படையில் ரூபா 30,000க்கு விற்பனை செய்யப்பட்டது.
- உட்திரும்பி வந்தவை ரூபா 5,000 கிரயமான ரூபா 7,500க்கு விற்பனை செய்யப்பட்டது.
- நவம்பர் மாத விற்பனைக்கான கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு ரூபா 38,000
- கடந்த மாதம் பதிவழிக்கப்பட்ட அறவிடமுடியாத கடன் ரூபா 3,000 மீளப் பெறப்பட்டது.
- இம்மாதம் பதிவழிக்கப்பட்ட அறவிடமுடியாத கடன் ரூபா 1,000 ஆகும்.

2011 நவம்பர் மாதத்திற்கு சரத்தின் வியாபாரத்தில் காசு அடிப்படையிலான வருமானம், அட்டுறு அடிப்படையிலான வருமானமும் முறையே

1. ரூபா 68,000 ரூபா 90,000
2. ரூபா 30,000 ரூபா 60,000
3. ரூபா 71,000 ரூபா 82,500
4. ரூபா 71,000 ரூபா 81,500
5. ரூபா 68,000 ரூபா 82,500 (…….)

24. பின்வரும் தகவல்கள் பொதிகளை அனுப்பும் கம்பனியொன்றுடன் தொடர்புடையது. E.P.F பங்களிப்பு சம்பளத் தொகையில் கம்பனியும் ஊழியரும் முறையே 12%, 8% ஆகும். E.T.F 3% ஆகவும் கம்பனியால் செலுத்தப்படுகிறது. 2010 ஏப்ரல் மாதத்துக்கு கம்பனியால் செலுத்தப்பட்ட E.T.F ரூபா 37,500 ஆக இருந்தது. மற்றும் கம்பனி ஊழியர்களுக்கு வழங்கியிருந்த விழா முற்பணம் ரூபா 50,000 ஐ ஏப்ரல் மாதச் சம்பளத்தில் கழித்திருந்தது. 2010 ஏப்ரல் மாதத்திற்கு ஊழியர்களுக்குச் செலுத்தப்படும் சம்பளம்?

1. ரூபா 1,280,000 2. ரூபா 1,100,000
3. ரூபா 1,104,000 4. ரூபா 1,177,000
5. ரூபா 1,200,600 (………)

25. பின்வரும் தரவுகள் மோட்டார் வாகனம் தொடர்பானவை ஆகும்.

மோட்டார் வாகனக் கிரயம் ரூபா 122,000
ஆயுட்காலம் 10 வருடங்கள்
எச்சப் பெறுமானம் ரூபா 20,000
விற்பனை செய்யத் தீர்மானித்த தேறிய மீதி ரூபா 850,000
விற்பனைக்குத் தீர்மானிக்கப்பட்ட திகதியில் சாதாரண பெறுமானம் ரூபா 810,000

மோட்டார் வாகனம் அழிவுறும் நட்டம் எனப்படும் தொகை யாது?

1. ரூபா 120,000 2. ரூபா 122,000
3. ரூபா 40,000 4. ரூபா 370,000
5. ரூபா 20,000 (………)

26. பங்குடமை ஒன்றில் நட்டம் பகிர்வு செய்யப்பட்ட முறை பின்வருமாறு

வருடத்துக்கான நட்டம்			(40,000)
மூலதன வட்டி	ரூபன்	30,000	
	காந்தன்	20,000	
	சிவன்	10,000	(60,000)

சம்பளம்	ரூபன்	20,000	
	சிவன்	20,000	(40,000)
			(140,000)
நட்டப்பகிர்வு	ரூபன்	56,000	
	காந்தன்	56,000	
	சிவன்	28,000	140,000

சிவனின் ஆகக்குறைந்த வருட வருமானம் ரூபா 50,000த்தை சீராக்கம் செய்த பின் ரூபன், காந்தன் ஆகியோரின் இறுதி நட்டப் பங்கு சரியாகக் காட்டப்படும் விடையினைத் தெரிவு செய்க.

	ரூபன்	காந்தன்
1.	ரூபா (80,000)	ரூபா (80,000)
2.	ரூபா (66,000)	ரூபா (66,000)
3.	ரூபா (10,000)	ரூபா (10,000)
4.	ரூபா (15,000)	ரூபா (10,000)
5.	ரூபா (15,000)	ரூபா (5,000)

(……..)

27. தொழிற்சாலை ஒன்றில் மூலப்பொருள் தொடர்பான தரவுகள் வருமாறு

இழிவு நுகர்வு நாளொன்றுக்கு 140 அலகுகள்
சராசரி நுகர்வு நாளொன்றுக்கு 150 அலகுகள்
மறுகட்டளைத் தொகை 3,000 அலகுகள்
மறுகட்டளையிடும் காலம் சராசரி 20 நாட்கள்
அறிக்கையிடும் மட்டம் யாது?

1. 3,000 அலகுகள்
2. 3,200 அலகுகள்
3. 4,800 அலகுகள்
4. 1,400 அலகுகள்
5. 2,800 அலகுகள்

(………)

28. ராஜாவினது புத்தகங்களில் ராணியினது கணக்கில் ரூபா 11,250க்கான ஓர் வரவு மீதி இருந்தது. அது கருதுவது யாதெனில்.

1. ராணிக்கு ராஜாவால் ரூபா 11,250 கொடுக்க வேண்டியுள்ளது.
2. ராஜா ராணிக்கு ரூபா 22,500 கொடுக்க வேண்டியுள்ளது.
3. ராணி ராஜாவுக்கு ரூபா 11,250 கொடுக்க வேண்டியுள்ளது.
4. ராணி ராஜாவுக்கு ரூபா 11,250 பெறுமதியான பண்டங்களைத் திருப்பியுள்ளார்.
5. ராஜாவுக்கு ராணியினது ரூபா 11,250 தொகை அறவிடமுடியாத கடன் தொகையாகும்.

(…….)

29. வரையறுத்த சொக்கன் கம்பனியின் 31.03.2012 உரிமை அசைவுக் கூற்றில் இருந்து எடுக்கப்பட்ட அட்டவணை வருமாறு

திகதி	மூலதன மீட்பு ஒதுக்கம்	பொது ஒதுக்கம்	இலாப நட்ட கணக்கு மீதி
01.04.2011	30,000	10,000	20,000
30.06.2011	10,000	10,000	20,000
30.09.2011	10,000	10,000	10,000
31.03.2012	10,000	15,000	5,000
31.03.2012	10,000	15,000	11,000

இவ் அசைவுகளுக்கு ஏதுவாக இருக்கக்கூடிய நடவடிக்கைகள் வருமாறு

A - உபகாரப் பங்கு வழங்கல்
B - சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யும் மிகை
C - பொது ஒதுக்கத்துக்கு மாற்றம்
D - முன்னுரிமைப் பங்கு வழங்கல்
E - இடைக்காலப் பங்கு இலாபம் செலுத்துதல்
F - இவ் ஆண்டுக்கான இலாபம் மாற்றப்படல்
G - முன்னுரிமை பங்குகளை மீட்டல்

கால ஒழுங்கில் நடைபெற்ற நடவடிக்கைகளைத் தெரிவு செய்க.

1. BECF
2. AECG
3. BECG
4. AECF
5. ABCG

(……)

30. “கம்பனியொன்றின் நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு அதிகாரமளிக்க முன்னர் ஆனால் ஐந்தொகை தினத்துக்கு பின்னர் வெளிப்படுத்தப்பட்ட பங்குலாபங்கள் ஆனவை ஐந்தொகை தினத்தன்று பொறுப்பாக இனங்காணப்படுவதில்லை”

இக் கூற்றினை பின்வருவனவற்றுள் எது நியாயப்படுத்துகிறது.

1. இது ஐந்தொகை தினத்துக்கு பின்னரான நிகழ்வாக இருப்பதாகும்.
2. இது நிகழ்கால கடமைப்பாடொன்றாக ஐந்தொகை தினத்தில் இல்லாதிருப்பதால்
3. ஐந்தொகை தினத்துக்குப் பின்னர் முக்கியமான தொகையொன்றாக செலுத்த வேண்டிய தாகக் கருதப்படுவதால்
4. இது செலவிற்கான வரைவிலக்கணத்தின் கீழ் வருவதில்லை என்பதால்.
5. இது எதிர்கால காசு வெளிப்பாய்ச்சலுக்கு இட்டுச் செல்வதால் (……..)

31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடைகளைப் புள்ளிக் கோடுகளின் மீது எழுதுக.

31. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களையும் பதிவதற்குப் பயன்படுத்தப்படும் பொருத்தமான மூலப்பதிவேடு, மூல ஆவணத்தைக் குறிப்பிடுக.

		மூலப்பதிவேடு	மூல ஆவணம்
1.	கடன்பட்டோர் ஒருவர் முறிவடைந்தமையால் பெறவேண்டிய தொகை அறவிட முடியாத கடனாகப் பதிவழித்தல்		
2.	வங்கி அறவீடு		
3.	கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு		
4.	பீரிஸ் கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனம்		

32. இலங்கை கணக்கீட்டு நியமம் 37ற்கு அமைய ஏற்பாடு தொடர்பான கடப்பாடுகள் 02 தருக.

1. …………………………………………………………………………………………
2. …………………………………………………………………………………………

33. இலங்கை கணக்கீட்டு நியமம் 18இற்கமைய வருமானத்தினை இனங்காண்பதற்கு பூர்த்தி செய்ய வேண்டிய நியதிகள் இரண்டு தருக.

1. …………………………………………………………………………………………
2. …………………………………………………………………………………………

34. கூலிக்கிரயத்தை கணிப்பிடுகையில் பயன்படுத்தப்படும் தொழிற்பாட்டுக் காலத்தைப் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் ஆவணங்கள் யாவை?

1. …………………………………………………………………………………………
2. …………………………………………………………………………………………
3. …………………………………………………………………………………………
4. …………………………………………………………………………………………

35. 2011ம் ஆண்டில் ஜெகன் என்பவரது கடன் தொகை சார்பாக 30% ஐயக்கடன் ரூபா 3,000க்கு ஏற்பாடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2012இல் ஜெகன் முறிவடைந்தமையால் அக்கடனை முழுமையாகப் பதிவழிக்கத் தீர்மானிக்கப்பட்டது.
இதற்கான நாட்குறிப்புப் பதிவுகளைத் தருக.

36. குறித்த பொருளொன்றின் தற்போதைய வெளியீட்டு மட்டம் 1,650 அலகுகள் சமப்பாட்டுப் புள்ளி 1,500 அலகுகள் அலகுக்கான பங்களிப்பு ரூபா 40 எனின் தற்போதைய வெளியீட்டு மட்டத்தில் நிறுவனம் அடையும் இலாபம் எவ்வளவு?.

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

37. நாதன் கம்பனி லிமிட்டெட் 31.03.2012இல் முடிவுற்ற ஆண்டில் ஓர் உற்பத்திச் செய்முறைக்காக ரூபா 300,000க்கு புத்தாக்கத்தை விருத்தி செய்வதற்காக செலவு செய்தது. இவற்றுள் ரூபா 30,000 தொகையானது 01.01.2012இல் ஏற்பட்டிருந்தது. எனினும் இதனது விளைவு உறுதிப்படுத்தப்படவில்லை. 31.03.2012இல் முடிவடையும் நிதி வருடத்தில் இவை நிதிக்கூற்றுகளில் பிரதிபலிக்கும் விதத்தைக் காட்டுக.

- 38ம் 39ம் வினாக்களுக்கு விடையளிக்கையில் கீழ்வரும் தகவல்களைப் பயன்படுத்துக. வரையறுத்த ‘‘சுந்தர்’’ பொதுக்கம்பனி இரண்டு செயற்திட்டங்கள் தொடர்பான முடிவுகளைப் பெற வேண்டியிருந்தது. அவை தொடர்பான தகவல்கள் வருமாறு

	செயற்திட்டம் P	செயற்திட்டம் Q
ஆரம்ப முதலீடு	140,000	140,000
காசு உட்பாய்ச்சல்		
வருடம் 1	50,000	80,000
2	60,000	50,000
3	10,000	20,000
4	30,000	20,000
5	15,000	20,000

38. இரு செயற்திட்டங்களினதும் திரும்ப அளித்த காலத்தைக் கணிப்பிடுக.

………………………………………………………………………………………….

………………………………………………………………………………………….

39. இலாபகரமான செயற்திட்டம் என நீர் எவற்றைக் கருதுவீர் காரணம் தருக.

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

40. 31.03.2012இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான இருப்பு மதிப்பீடு செய்ய முடியாதுபோனதால் 10.04.2012 அன்று இருப்பு ரூபா 59,000 என மதிப்பிடப்பட்டது. 01.04.2012 – 10.04.2012 வரை இடம்பெற்ற கொள்வனவுகள் ரூபா 20,500, விற்பனைகள் ரூபா 30,000, கொள்வனவுத் திரும்பல் ரூபா 3,000, விற்பனைத் திரும்பல் ரூபா 5,000 விற்பனைகள் யாவும் விற்பனை விலையில் 10% இலாபம் சேர்த்து விற்பனை செய்யப்பட்டுள்ளன. 31.03.2012இல் இருந்த இருப்பின் பெறுமானம் யாது?

………………………………………………………………………………………….

………………………………………………………………………………………….

41. சுதாஸ் நிறுவனத்தின் 2011இற்கான ரூபா 240,000 விற்பனை ஆகும். கொள்விலையில் மொத்த இலாபம் 20%. ஆண்டிற்கான செலவுகள் ரூபா 32,000, ஈடுபடுத்திய முதல் மீதான திருப்பம் 10% எனின்

அ) தேறிய இலாப வீதம் :-…………………………………………………

ஆ) சராசரி மூலதனம் :- ………………………………………………………

இ) விற்பனைக் கிரயம் :- ……………………………………………………

42. இலங்கை கணக்கீட்டுக் கிரயம் 1ற்கமைய நிதிக் கூற்றுத் தொகுதியில் உள்ளடக்கப்படும் 04 பிரதான கூறுகள் தருக.

1. ……………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………
3. ……………………………………………………………………………………
4. ……………………………………………………………………………………

43. முதலீட்டு செயற்திட்டமொன்றில் தேறிய நிகழ்காலப் பெறுமதி பின்வருவனவற்றில் அதிகரிக்குமா அல்லது குறைவடையுமா என்பதை ஏனைய காரணிகளில் மாற்றமில்லை எனக் கருத்திற் கொண்டு குறிப்பிடுக.

1. கழிவீட்டு வீதத்தில் அதிகரிப்பு :-

2. ஆரம்ப முதலீட்டுத் தொகையில் குறைவு :-

44. வணிகம் ஒன்றில் காணப்படும் பொறுப்பு ஒன்றுக்கான இரு பண்புகளை எழுதுக.

1. ……………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………

45. தனியுடமை வியாபாரமொன்றின் 01.01.2011 இல் மூலதன மீதி ரூபா 410,000 ஆகவும், 31.12.2011இல் மூலதன மீதி ரூபா 660,000 ஆகவும் 2011ம் ஆண்டுக்கான விற்பனை ரூபா 500,000 ஆகவும் இருந்தது.

- இலாப எல்லை விற்பனை விலையில் 40% ஆகும்.
- ஆண்டுக்கான செயற்பாட்டுச் செலவு ரூபா 70,000 ஆகும்.

- ஆண்டு முழுவதும் உரிமையாளர் ரூபா 80,000 காசினைப் பற்றியிருந்தார்.

2011ம் ஆண்டு உரிமையாளரால் உள்ளீடு செய்யப்பட்ட புதிய மூலதனம் எவ்வளவு?

………………………………………………………………………………………………..

46. கமல், விமல் இலாபநட்டங்களைச் சமனாக பகிரும் பங்காளர். அமல் புதிதாக இணைந்து கொண்டார். இவர் தனது நன்மதிப்பு பங்காக ரூபா 20,000 காசினைக் கொண்டு வந்தார். இத்தினத்தில் புதிய இலாப நட்ட விகிதம் 3:2:1 ஆகும். இந்நிறுவனத்தில் நன்மதிப்புப் பெறுமதி அமல் இணையும் போது யாது?
………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

47. இலங்கை கணக்கீட்டு நியமம் 2 இன்படி சரக்கிருப்பினை கணக்கீட்டில் உட்படுத்துவதற் கான அடிப்படைகளைக் குறிப்பிடுக.
………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

48. கீழ் தரப்பட்டுள்ள தகவல்கள் வியாபாரமொன்றின் அலுவலக எழுதுபொருட்கள் தொடர்பானதாகும்.
01.01.2011 இல் எழுதுபொருட்கள் கணக்குமீதி ரூபா 6,000
எழுதுபொருள் கடன்கொடுத்தோருக்குச் செலுத்திய காசு ரூபா 27,000
31.12.201இல் நிலுவையாக இருந்த எழுதுபொருட் கடன் கொடுத்தோர் ரூபா 3,000
31.12.2011இல் பாவிக்கப்படாது நல்ல நிலையில் இருந்த எழுதுபொருட்களின் பெறுமதி ரூபா 4,000
இக் கணக்காண்டு காலத்தினுள் சேதமடைந்த எழுது பொருட் கிரயம் ரூபா 1,000 இச் சேதமடைந்த எல்லா எழுதுபொருட்களினையும் விற்பனை செய்ததினால் பெற்ற காசு ரூபா 300ஆகும். 31.12.2011 இல் முடிவுற்ற ஆண்டுக்கான மொத்த எழுது பொருட்கிரயத்தைக் கணிக்குக.
………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………..

49. பங்களிப்பு விற்பனை விகிதம் உயர்வாக இருக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் இரண்டு தருக.
1. ………………………………………………………………………………………
2. ………………………………………………………………………………………

50. வரையறுத்த கம்பனியின் கடன் தீர் தகைமைப் பரிசோதனை அவசியமாகும் சந்தர்ப்பம் இரண்டு தருக.
1. ………………………………………………………………………………………
2. ………………………………………………………………………………………

கணக்கீடு **வினாத்தாள் I** **விடைகள்**

1 - 2	11 - 2	21 - 5
2 - 3	12 - 2	22 - 3
3 - 1	13 - 5	23 - 3
4 - 3	14 - 5	24 - 2
5 - 3	15 - 5	25 - 3
6 - 1	16 - 2	26 - 1
7 - 4	17 - 2	27 - 5
8 - 5	18 - 2	28 - 3
9 - 4	19 - 5	29 - 4
10 - 1	20 - 3	30 - 2

31.

	மூலப்பதிவேடு	மூல ஆவணம்
1	பொதுத்தினசேரி	நாட்குறிப்புக் கச்சாத்து
2	காசேடு	வங்கிக்கூற்று
3	காசேடு	பற்றுச்சீட்டு
4	பொத்தினசேரி	நாட்குறிப்புக் கச்சாத்து

32. சட்ட ரீதியான கடப்பாடு
கட்டுருவாக்க கடப்பாடு

33. எதிர்கால பொருளாதார நலன்கள் வணிகத்தினுள் உள்வருவது நிச்சயமானதாக இருத்தல்.
இந்நலன்கள் நம்பத்தன்மையுடையனவாகவும் அளவிடக் கூடியதாகவும் இருத்தல்.

34. நேர அட்டை
வேலை அனுமதி பத்திரம்
வேலைக்கிரய அட்டை
துண்டு வேலை அனுமதிப்பத்திரம்
வேலை செய்யாத வீணான நேர அட்டை

35. அறவிடமுடியாத கடன் கணக்கு வரவு 7,000
ஐயக்கடன் கணக்கு வரவு 3,000
கடன்பட்டோர் கணக்கு செலவு 10,000

36. 150 x 40/= = 6,000/=

37. இலாபநட்டக் கணக்கில் - 30,000 ரூபா ஆராய்ச்சி செலவு
ஐந்தொகையில் - 27,000 ரூபா அபிவிருத்திச் செலவு

38. திரும்ப அளித்தல் காலம் $= \dfrac{\text{நிகர/ தேறிய முதலீடு}}{\text{வருடாந்த நிகர காசுப்பாய்ச்சல்}}$

P $= 3 + \dfrac{2,000}{30,000} \times 12$

$=$ 3 வருடமும் 8 மாதமும்

Q $= 2 + \dfrac{10,000}{20,000} \times 12$

$=$ 2 வருடம் 6 மாதம்

39. செயற்திட்டம் Q
P யுடன் ஒப்பிடும்போது மீளச் செலுத்தும் காலம் Qக்கு குறைவாகக் காணப்படல்

40. ரூபா 64,000

41. அ) $33\frac{1}{3}$ %
ஆ) ரூபா 80,000
இ) ரூபா 200.000

42. வருமானக் கூற்று
ஐந்தொகை
உரிமை மாற்றல் கூற்று
காசுப்பாய்ச்சல் கூற்று
கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும்

43. 1. குறைவு
2. அதிகரிப்பு

44. - கடந்த கால நிகழ்வொன்றின் விளைவாகும்.
- நடப்பு ஆண்டில் செலுத்துகை ஒன்றாக அமைதல்.
- வியாபார நிறுவனத்திலிருந்து பொருளாதார வளம் வெளிப்பாய்ச்சப்படுவதாக எதிர்பார்த்தல்.

45. ரூபா 200,000

46. ரூபா 120,000

47. சரக்கிருப்பின் கிரயம், தேறிய பெறுமதி இரண்டிலும் எது குறைவோ அதனைக் கணிப்பில் எடுத்தல்.

48.

ஆரம்ப இருப்பு	6,000
கொள்வனவு (27,000 + 3,000)	30,000
	36,000
(-) இறுதி இருப்பு	(4,000)
	32,000
(-) சேதமடைந்த விற்பனை	(300)
பயன்படுத்திய எழுதுபொருட் கிரயம்	31,700

49. - அலகுக்கான எல்லைச் செலவைக் குறைத்தல்.
- அலகுக்கான விற்பனை விலையை உயர்த்துதல்.
- அதிக இலாபம் தரும் பொருட்களை விற்பனை செய்தல்

50. - பங்கு பகிர்வின் போது
- பங்குகளின் மீள்கொள்வனவின்போது
- பங்குகளை மீட்கும்போது
- கம்பனிகளை ஒருங்கிணைக்கும் நோக்கில் பொறுப்பினைக் குறைக்கும்போது

The National e-learning Portal for the General Education